# கல்வி மெய்யியலில் கல்விச் சிந்தனை – திருக்குறளை அடிப்படையாக கொண்டது

க.கணேசராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்:**

**உண்மை பற்றிய தேடலை அல்லது விசாரணையை மெய்யியல் என்பர். இம்மெய்யியலானது தன்னைப் பற்றியும், தனக்கு புறம்பாகவுள்ளவை பற்றியதுமான ஒரு விசாரணையை மேற்கொள்ளும் ஒரு துறையாகும். இது எல்லா துறைக்கும் ஒரு ஆரம்ப துறை என்பதால் இதனை (ஆழவாநச ழக ளரடிதநஉவ) தாய்த்துறை என்பர். இம் மெய்யியலில் நான்கு முக்கியமான துறைகள் காணப்படுகின்றது. அவை அறிவாராய்ச்சியல், ஒழுக்கவியல், பௌதீகவதீதம், அழகியல் என்பனவாகும். அத்தோடு மெய்யியலுக்கும் ஏனைய பல துறைகளுக்குமிடையே தொடர்புகள் காணப்படுகின்றது. குறிப்பாக அரசியல் மெய்யியல், சமய மெய்யியல், விஞ்ஞான மெய்யியல், உள மெய்யியல் போன்று கல்வி மெய்யியலும் முக்கியமான ஒன்றாகும். நுனரஉயவழைn என்ற ஆங்கில சொல்லுக்காக கல்வி என்ற சொல் தமிழில் பயன்படுத்தப்படுகின்றது. இச் சொல்லானது Educate என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபாகும். கல்வி எனும் சொல்லுக்கு கல்லுதல், தோன்டுதல், கிழறுதல், எனும் கருத்துக்கள் உள்ளன. அதாவது உள்ளார்ந்த சக்தியை கல்லுதல், தோன்டுதல், அகழ்ந்து வெளிக் கொணர்தல், கிழறுதல் ஆகும். அதாவது 'குழந்தைகளின் உள்ளே இருக்கும் அறிவாற்றலை மிளிரச்செய்தல் கல்வியாகும்' எனக் கொள்ளலாம். இவ்வாறு வெளிக் கொணரும் பணியானது தொண்டு தொட்டு தமிழ் மரபில் முக்கியமானது என்பதை நாம் அறிவோம்.**

**கல்வி என்றால் என்ன? கல்வியைஎவ்வாறு பெறுவது? கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பு உள்ளதா? கல்வி அறிவாராய்ச்சியலோடு தொடர்பு உள்ளதா? உண்மையான கல்வி யாது? கல்வி அழியுமா? அழியாதா? பௌதீக கல்வி ஏற்புடையதா? பௌதீகவதீத கல்வி ஏற்புடையதா? என்பன போன்ற பல வினாக்களுக்கு கீழைத்தேய, மேலைத்தேய சிந்தனையாளர்கள் பல கருத்துக்களை முன் வைக்கிறார்கள். மேலைத்தேய சிந்தனை மரபில் சோக்கிரடீஸ், பிளேட்டோ,ரூசோ, மாக்ஸ் தொடக்கம் ஜோன்டுயி வரை பலர் கருத்துக்களை கூறியிருக்கிறார்கள் அதே போல் கீழைத்தேய சிந்தனை மரபில் யக்ஞவல்லியர்; தொடக்கம் வள்ளுவர், அரவிந்தர், மகாத்மாகாந்தி, சங்கராச்சாரியார், விவேகானந்தர், விபுலானந்தர் வரையிலான கீழைத்தேய சிந்தனையாளர்களும் தத்தமது வாழ்க்கை தத்துவங்களின் அடிப்படையில் கல்வியை வரையறை செய்கின்றார்கள். அவர்களது சிந்தனைகளிலிருந்து கல்வி பற்றிய பல்வேறு வரையிலக்கணங்களும்**

எண்ணங்களும் தோன்றியுள்ளன. அவ்வாறான கீழைத்தேய சிந்தனை மரபில் திருக்குறளினது கல்விச் சிந்தனையை ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

திருக்குறள்
இலக்கியம் சமூதாயத்தின் வெளிப்பாடு என்றும் வாழ்க்கையின் கண்ணாடி என்றும் கூறுவர். இவ் இலக்கியங்கள் வாழ்க்கை முறையை புலப்படுத்துவதோடு வாழ்க்கையை உயர்த்துவதாகவும் உள்ளன. இவற்றில் அற இலக்கியங்களின் பங்களிப்புக்கள் உன்னதமானவை. தமிழ் இலக்கிய வரலாற்றில் இயற்கை நெறிக்காலம், அறநெறிக்காலம், சமயநெறிக்காலம், தத்துவ நெறிக்காலம், அறிவியல் நெறிக்காலம் என வகுத்துக் கூறுவதுண்டு. இந்த அறநெறிக்காலத்து இலக்கியங்களில் பதினென்கீழ்கணக்கு நூல்கள் மிக முக்கியமானதாகும். சங்கம்மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் பதினெண்கீழ்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. இந்நூல்கள் அறம் அகம் புறம் என மூன்றாக பகுக்கப்பட்டுள்ளன. இதில் அக நூல் பதினொன்று, அக நூல் ஆறு, பற நூல் ஒன்று என்ற வகையில் அமைந்துள்ளன. இந் நூல்களில் அறநூல்களில் ஒன்றாகவே திருக்குறள் காணப்படுகின்றது. இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர். திருக்குறளே தமிழில் தோன்றிய முதல் அற நூல் என்ற சிறப்பும் உண்டு. திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை திருக்குறளை கற்று போற்றாத தமிழ் அறிஞர்கள் இல்லையென்ற வகையில் இந்நூல் சிறப்புப் பெற்றிருக்கிறது. இந்நூல் தமிழ் மக்களின் உயர்ந்த பண்பாட்டிற்கு விளக்கமாக அமைந்திருக்கின்றது. அறநெறி காலத்தில் மட்டுமன்றி அதை தொடர்ந்துவரும் காலங்கள் அனைத்திலும் இந்நூலும் இந்நூலின் கருத்துக்களும் சிறப்புற்று விளங்குவதால் இந்நூலில் கூறப்பட்டுள்ள பல விடயங்களில் தத்துவம் சார்ந்துள்ளது.

கீழைத்தேய சிந்தனை மரபில் எப்படியும் வாழாம் என்று எண்ணுவது வாழ்க்கையாகிவிடாது. இப்படித்தான் வாழ வேண்டும் என்று செய்து கொள்ளும் வரையறையும் கல்வியின் உயர்வுக்கு சிறந்த வழியாக அமைய வேண்டும் என்பது பற்றியும் அற இலக்கிய நூலான திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. திருக்குறளில் 130 அதிகாரங்களையும் 1330 இரு வரி பாடல்களையும் கொண்ட நூலாகவுள்ளது. இந்நூலில் பொருட்பாலிலுள்ள 10 பாடல்கள் கல்வி பற்றிய கருத்தினை தெளிவு (391 – 400) படுத்துகின்றது. இங்கு கல்வி பற்றி கூறப்படும் விடயங்களை பகுப்பாய்வு செய்யும் போது கற்ற கல்வியின் அளவிற்கே அறிவு, செல்லும் இடமெல்லாம் மரியாதை, சரியாக கற்க வேண்டும், எண்ணும் எழுத்தும் இரு கண்களாகும், எப்போதும் சாதிக்க போகின்றேன் என்ற சிந்தனை அவசியம், கற்றுக் கொள்ள மனம் கொள்ளல், கற்ற கல்வி அனைத்து பிறவியிலும் தொடரும், கல்வியை மேலும் விரும்புவார்கள், கல்வி அழிவில்லாத செல்வம் போன்ற வகையில் விபரிக்கப்பட்டுள்ளதனை எங்களால்; அவதானிக்க முடிகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக கீழ்வரும் பாடல்களை பார்க்கலாம்.

உலகிலுள்ள நாம் அனைவரும் அறிவினை காட்சி , அனுமானம் , உரை போன்ற மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்கின்றோம். இவற்றின் மூலம் வாள்வாங்கு வாழ்வதற்கு அடிப்படை காரணியாக இருப்பது கல்வியாகும். கல்வி பற்றி கி.மு நான்காம்; நூற்றாண்டில் பிளேட்டோ என்ற கிரேக்க சிந்தனையாளர் தனது 'குடியரசு' என்ற நூலில் இலட்சிய அரசுக்காக ஆட்சியாளர்களை உருவாக்குவதற்காக கல்வியை ஆயுதமாக பயன்படுத்தினார். அவர் கல்வி பற்றிய கருத்து கருத்தியல்ரீதியாக அல்லது ஒழுக்கவியல்ரீதியாக அமையப் பெற்றது. கல்வியானது 'உடலிலும் ஆன்மாவிலும் எல்லா நன்மைகளையும் விரும்த்தியாக்க வேண்டும், மனிதனது ஆற்றல் முழுவதையும் விருத்தியாக்க வேண்டும் எனக்குறிப்பிட்டார். இவரது கருத்திற்கு சார்பாகவே வள்ளுவப் பெருந்தகையும் தனது நூலில் கல்வி பற்றிய சிந்தனையை தெளிவுபடுத்தும் போது கல்வி என்பது முக்கியமானது எனவும் கற்கும் போது கற்க தகுந்த நூல்களை குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். இதன் மூலம் வாழ்க்கையின் பௌதீக ஒழுக்க மேம்பாட்டை பின்பற்றுவதன் ஊடாக பௌதீகவதீத ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றார். இது பற்றிய செய்திகள் 10 பாடல்களில் (391,392,393,394,395, 396,397,398,399,400) சொல்லப்;பட்டுள்ளன.

### கல்வியின் இலக்கு

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். அதாவது பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்ற பிறகு அதன்படி நடக்கவேண்டும் என கல்வியின் இலக்கு பற்றி வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இதனை,

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

எனும் குறளில் காணலாம்.

### கல்வியின் பிரதான இரு வகைகள்

எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர். அதாவது எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள். இதில் இரு வகை கல்வி கூறப்படுகின்றது. இதனை,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

எனும் குறளில் காணலாம்.

### கற்றோரின் இயல்பு

மகிழும்படியாகக் கூடிப் பழகி. (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும். அதாவது மகிழ்ச்சி பொங்கிடச்

சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும் போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும். இதனை,

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

எனும் குறளில் காணலாம்.

கல்வி கற்றவரின் மேன்மை

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கல்வியையே) விரும்புவர். அதாவது தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள். இதனை,

'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

எனும் குறளில் காணலாம்.

கல்வியின் சிறப்பு

கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும்போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகும்வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்? கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ? ஏன கல்வியின் சிறப்பைக் கூறுகின்றார். இதனை,

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு'

எனும் குறளில் காணலாம்.

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு எழுபிறப்பிலும் உதவும் தன்மையுடையதாகும். அதாவது ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும். இதனை,

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து'

எனும் குறளில் காணலாம்.

கல்வியின் தனித்துவம்

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய ) செல்வம் அல்ல. அதாவது கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. இதனை,

'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை'
எனும் குறளில் காணலாம்.

கல்வியின் பயன்

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும். அதாவது தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். இதனை,

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'
எனும் குறளில் காணலாம்.

கல்லாதவர் இழிவு

செல்வர்முன் வறியவர் நிற்பதுபோல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர்; கல்லாதவர் இழிந்தவர். அதாவது அறிவுடையார் முன் அறிவில்லாதவர் போல் தாழ்ந்து நின்று, மேலும் கற்றுக்கொள்பவர்களின் ஆர்வத்தைக் கற்றுக் கொள்ளாதவர்கள் கடைநிலை மாந்தராக கருதப்படுவார்கள். இதனை,

'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்'
எனும் குறளில் காணலாம்.

இதுபோல் கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றவர் கற்றவNர் கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர். கண்ணில்லாவிடினும் அவர் கற்றவராக இருப்பின் கண்ணுடையவராகவே கருதப்படுவார். கல்லாதவருக்குக் கண் இருப்பினும் அது புண் என்றே கருதப்படும் என கல்லாதவரின் இழிவு கூறப்படுகின்றது. இதனை,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'
எனும் குறளில் காணலாம்.

முடிவுரை

தொகுத்து நோக்கும் போது திருக்குறள் மனிதன் நல்லறிவு அடைவதற்கு வழி காட்டும் இரு கண்கள் போன்றது. கண்ணுள்ளவர்கள் என்று சொல்ல தகுந்தவர்கள் கற்றவர்களே. கற்றறிந்தவரே நற்கருத்துக்களை எடுத்துரைப்பர். ஒருவன் தான் வாழ்வதற்கு தேவையான கல்விச் செல்வத்தை பெற கற்றறிந்த அறிஞர் முன் தாழ்ந்து நிற்பானே ஆயினும் கற்றவன் எனில் அவன் உயர்ந்தவனே, கல்லாதவன் இழிந்தவனே என்று கூறி கல்வியின் முக்கியத்துவத்தை சமூகவியல் நோக்கிலும், உளவியல் நோக்கிலும் சுட்டிக்காட்டியிருக்கின்றது. கீழைத்தேய சிந்தனை மரபில்

சங்கம்மருவிய கால பதினெண் கீழ்கணக்கு நூல்களில் திருக்குறள் ஒழுக்கவியல்கள் சார்ந்;திருந்த போதும் கல்வி பற்றிய சிந்தனைக்ளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற நூலாக அமைய பெற்றுள்ளது. இதன் காரணமாகப் பிற்பட்டகாலப்பகுதியில் தமிழியல் மெய்யியல் வரலாற்றில் முக்கியமான ஒரு நூலாகப் போற்றப்படும் அதே நேரம், கீழைத்தேயத் தத்துவம் ஒரு வாழ்க்கையோடு இணைந்த தத்துவம் என்பதனையும் உணர்த்துகிறது.


உசாத்துணை நூல்கள்

1) சந்திரசேகரம். ப, 1975, கல்வித் தத்துவம், தமிழ்நூற்பதிவு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

2) செல்வராஜா. மா, 2009, கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், எவக்கீறின் அச்சகம், மட்டக்களப்பு.

3) வேலுப்பிள்ளை. ஆ, 1999, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பேபற் அச்சகம், கொழும்பு.

4) கணேசராசா. க, 2016, மெய்யியல் பிரச்சினைகள்;, தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடு, ஒலுவில், இலங்கை.

5) அனஸ். எம். எஸ். எம் 2003, மெய்யியல் அறிமுக உரைகள், கலாச்சார கற்கை நிலையம், பேராதனை.

6) ஞானகுமாரன். நா. 2003, மெய்யியல், செல்வம் வெளியீடு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.